*Scan the code using 'e Courts Services' Mobile application downloaded from play store*



தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.
முன்னிலை : **நா.செந்தில் முரளி., B.Sc., M.L.,**
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், சிவகங்கை.

2026ம் ஆண்டு மார்ச மாதம் 25–ம் நாள் புதன்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண். 66/2021</u>**

**<u>CNR No.TNSV02-005339-2024</u>**

(சிவகங்கை, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம்,
முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண். 24/2018,
சிவகங்கை நகர் காவல் நிலைய குற்ற எண். 498/2016)

-----

குற்ற முறையீட்டாளர் : தமிழ்நாடு அரசு சார்பில்
காவல் ஆய்வாளர்
சிவகங்கை நகர் காவல்நிலையம்
குற்ற எண். 498/2016

**<u>/எதிர்/</u>**

| | | |
|---|---|---|
| **குற்றம் சாட்டப்பட்டவர்கள்** | : | 1. தங்கராஜ்,<br>த/பெ. முனியாண்டி.<br>2. லெட்சுமணன்,<br>த/பெ.சிவசிங்கம். |
| **குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள்** | : | 1 மற்றும் 2 எதிரிகளின் – பிரிவுகள் 392, 397 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும். |
| **குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்** | : | 1 மற்றும் 2 எதிரிகளின் – பிரிவுகள் 397 உ/இ 392 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும். |

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.03.25 17:54:18 +0530

| | | |
|---|---|---|
| **குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாதுரை** | : | குற்றவாளிகள் இல்லை. |
| **நீதிபதியின் தீர்ப்பு** | : | 1 மற்றும் 2 எதிரிகள், பிரிவுகள் 397 உ/இ 392 மற்றும் 506(2) இ.த.ச–வின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 235(1) குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம், 1973–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் பிணைமுறி ஆவணம் மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டுக் காலத்திற்குப்பின் ரத்தாகவும் பிரிவு 452 கு.வி.மு.ச–வின் கீழ் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு சிவகங்கை, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.24/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தின் முன்பாக 12.03.2026–ல் இறுதி விசாரணைக்காக வந்தபோது, இவ்வழக்கில் குற்ற முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.N.விவேகானந்தன், அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளின்

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:54:24 +0530

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.வல்மீகிநாதன், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களைப் பார்வையிட்டும், இது நாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்தும், இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

இந்த வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகளின் மீது பிரிவுகள் 392, 397 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழ் குற்றம் புரிந்ததாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான திருப்பதியும், சாட்சி ராஜா என்பவரும், கடந்த 08.07.2016ம் தேதி காலை 10.00 மணியளவில் சிவகங்கை, காந்தி வீதியில் உள்ள சிவகங்கை மாவட்ட கூட்டுறவு வங்கி அருகில் நடந்து வந்து கொண்டிருந்தபோது, இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் சேர்ந்து TN–59–AK–5834 என்ற பதிவெண் கொண்ட காரில் வந்து, கைகளில் ஆளுக்கொரு வாளுடன் இறங்கி, தலைக்கு மேல் வாளை சுழற்றிக்கொண்டு அங்கு நின்றவர்களைப் பார்த்து நாங்கள் திருப்பாச்சேத்தி ஆவரங்காட்டைச் சேர்ந்தவர்கள் எங்களை கண்டாலே ஊரே நடுங்கும் என்று சொல்லி

புகார்தாரரின் சட்டைப்பையில் இருந்த பணத்தை எடுடா என்று சொல்லி மிரட்டியும், புகார்தாரர் தன்னுடைய சட்டைப் பாக்கெட்டை பிடித்துக்கொண்டு தரமுடியாது என்று சொன்னதால், 2வது எதிரி லெட்சுமணன் தனது கையில் வைத்திருந்த வாளால் புகார்தாரரின் வயிற்றில் வைத்து அழுத்தி நான் ஆவரங்காட்டைச் சேர்ந்த சிவசிங்கம் மகன் லெட்சுமணன் தெரியுமா நாங்கள் கொலை, கொள்ளைக்கு அஞ்சாதவர்கள் என்று சொல்லி பணம் கேட்டால் கொடுக்கமாட்டியா என்று பணத்தை எடுக்க வந்ததாகவும், புகார்தாரர் பயந்து ஓட முயன்றபோது 1வது எதிரி வாளால் ஓங்கி வெட்டியபோது புகார்தாரர் விலகிக் கொண்டதால் அந்த வெட்டு அவரது சட்டையில் பட்டு சட்டை கிழிந்து விட்டதாகவும், புகார்தாரர் மற்றும் சாட்சி ராஜாவும் சத்தம் போட்டு அலறிகொண்டு ஓடுவதை பார்த்த எதிரிகள் இருவரும் வாளை தலைக்கு மேல் சுழற்றியும், தரையில் தீப்பொறி பறக்க உரசியும், யாரும் பக்கத்தில் வந்தால் வெட்டி கொலை செய்து விடுவோம் என்று மிரட்டி ஆக்ரோசமாக கத்தியும், அப்போது புகார்தாரரை காப்பாற்ற வந்தவர்கள் அனைவரும் நாலா பக்கமும் சிதறி ஓடியுள்ளதால், காந்தி வீதியில் இருந்த கடைகளை அடைத்து, பொதுமக்கள் அனைவரும் பீதி அடைந்து, போக்குவரத்து ஸ்தம்பித்து, புகார்தாரர் வடக்கு பக்கமாக ஓடும்போது கீழே தவறி விழுந்தவுடன் 1வது எதிரி புகார்தாரரின் கழுத்தில் வாளை வைத்து அழுத்தியும், 2வது

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:54:36 +0530

எதிரி வாளை வயிற்றில் வைத்து அழுத்திக்கொண்டு, புகார்தாரரை எதிரிகள் இருவரும் காலால் மிதித்துக் கொண்டு சட்டைப் பையில் இருந்த பணம் ரூ.5,000/-ஐ எடுத்துக்கொண்டும், இதைப் பற்றி யாராவது வெளியில் சொன்னால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டி, கொலை முயற்சி செய்து குற்றம் புரிந்துள்ளதாக சிவகங்கை நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் சிவகங்கை, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் சிவகங்கை, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பின்பு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) ன் படி சிவகங்கை, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திலிருந்து கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் இந்நீதிமன்றத்திற்கு கடந்த 15.07.2024 தேதி (Made Over) மாறுதலாகி, இந்நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:54:41 +0530

**4.** கு.வி.மு.ச பிரிவுகள் 226 மற்றும் 227ன் கீழ் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, அரசு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் குற்ற அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களை இவ்வழக்கு குற்றம் சாட்டப்பட்டவர்கள் செய்திருக்கிறார்கள் என்று அனுமானிப்பதற்கு போதுமான முதல் நோக்கு ஆதாரம் வழக்கில் இருக்கிறது என்று தீர்மானித்து, கு.வி.மு.ச.பிரிவு 228ன் படி கடந்த 18.11.2025ம் தேதி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது. 1 மற்றும் 2 எதிரிகளின் மீது பிரிவுகள் 397 உ/இ 392 மற்றும் 506(2) இ.த.ச–வின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து அதனை எதிரிகளுக்கு படித்துக்காட்டி விளக்கி கூறி வினவிய போது அதனை மறுத்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும், வழக்கினை விசாரணை செய்ய வேண்டுமென கோரினர்.

**5.** அரசு தரப்பில் **அ.த.சா.1** முதல் **அ.த.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.த.சா.ஆ.1** முதல் **அ.த.சா.ஆ.9** சான்றாவணங்கள் மற்றும் **அ.த.பொ.சா.1** முதல் **அ.த.பொ.சா.5** வரையிலான சான்றுபொருட்கள் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:54:47 +0530

**6. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:-**

அரசு தரப்பில் சம்பவ சாட்சிகளான அ.சா.1/திரு.திருப்பதி /நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் அ.சா.2/திரு.ராஜா, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சாட்சியான அ.சா.3/திரு.சீனிவாசன், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.4/திரு.சுந்தரலிங்கம் மற்றும் அ.சா.5/திரு.ஆனந்தகுமார் ஆகியோர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவர்கள் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

**6.1.** அ.சா.6/திரு.ஜான்பிரிட்டோ, சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், *"நான் தமிழ்நாடு காவல்துறையில் சிவகங்கை மதுவிலக்கு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.03. 2023 அன்று பணி நிறைவு பெற்றேன்.நான் தற்போது சிவகங்கையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 08.07.2016ம் தேதி காலை 11.30 மணியளவில் சிவகங்கை நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது அன்றைய தினம் கோகுலே ஹால் தெருவைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் திருப்பதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகார் மனுவினை/**அ.த.சா.ஆ.3** பெற்று நிலையக்குற்ற எண்.498/2016 இதச பிரிவுகள் 392, 397, 506(2)-*



N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:54:52 +0530

*ன் கீழ் நான் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை/**அ.த.சா.ஆ.4** பதிவு செய்தேன். பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு.மோகன் என்பவர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் திரு.மோகன் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.07.2016ம் தேதி மதியம் 12.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை சாட்சிகள் சீனிவாசன், நாகூர்கனி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர்/**அ.த.சா.ஆ.5** மற்றும் மாதிரி வரைபடம்/**அ.த.சா.ஆ.6** தயார் செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் சாட்சிகளான திருப்பதி, ராஜா மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் சீனிவாசன், நாகூர்கனி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கு சம்மந்தமான எதிரிகளை தேடி வந்த நிலையில் 09.07.2016ம் தேதி காலை 8.00 மணியளவில் சிவகங்கை முத்துக்காமாட்சி ஆர்ச் செக் போஸ்ட் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது TN 59 AK 5834 என்ற போர்டு காரை நிறுத்தி விசாரித்தபோது இவ்வழக்கின் எதிரியான தங்கராஜ் என்பவரை ஆய்வாளர் கைது செய்து விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள்*

அரவிந்தன், ஹரிபாஸ்கர் என்பவர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தங்கராஜ் இவ்வழக்கு குற்ற சம்பவத்தையும் பிற குற்ற சம்பவத்தையும் ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். பின்பு அதே இடத்தில் காலை 10.45 மணியளவில் எதிரி தங்கராஜ் ஆஜர் செய்த ரூ.5000/- (1000/- ரூபாய் நோட்டுக்கள் 5), வாள் - 1, பொம்மை கைத்துப்பாக்கி - 1, மற்றும் TN 59 AK 5834 என்ற போர்டு காரையும் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அந்த அத்தாட்சி/**அ.த.சா.ஆ.7**. ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றிய ரூ.5000/- (1000/- ரூபாய் நோட்டுக்கள் 5)-ன் புகைப்படம்/**அ.த.பொ.சா.1**. வாள்-1/**அ.த.பொ.சா.2**. பொம்மை கைத்துப்பாக்கி - 1/**அ.த.பொ.சா.3**. TN 59 AK 5834 என்ற போர்டு காரின் புகைப்படம்/**அ.த.பொ.சா.4**. பின்பு ஆய்வாளர் எதிரி தங்கராஜ் மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் அரவிந்தன், ஹரிபாஸ்கர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 10.07.2016ம் தேதி இவ்வழக்கின் மற்றொரு எதிரியான லட்சுமணன் என்பவரை காலை 7.00 மணிக்கு பூவந்தி காவல்நியைல சரக எல்லைக்குட்பட்ட படமாத்துார் விலக்கு என்ற இடத்தில் வைத்து ஆய்வாளர் அவரை கைது செய்து விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள்

*சுந்தரலிங்கம், ஆனந்தகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பின்பு அதே இடத்தில் காலை 9.15 மணியளவில் எதிரி லட்சுமணன் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்திய வாள் ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அந்த அத்தாட்சி/**அ.த.சா.ஆ.8**. ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றிய வாள்/**அ.த.பொ.சா.5**. பின்பு எதிரி லட்சுமணன் மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் சுந்தரலிங்கம், ஆனந்தகுமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 (2 தாள்கள்)/**அ.த.சா.ஆ.9**. பின்பு ஆய்வாளர் வழக்கின் விசாரணையை முடித்து 27.11.2016ம் தேதி எதிரிகள் மீது 392, 397, 506(2)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளார். ஆய்வாளர் விசாரணையின்போது அ.சா.1 முதல் அ.சா.2 வரையானவர்கள் இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டது குறித்தும் அ.சா.3 முதல் அ.சா.5 வரையானவர்கள் ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்தபோது எதிரிகளை கைது செய்து ஒப்புதல்வாக்குமூலம் பெற்று அத்தாட்சியில்வழக்கு சொத்துக்களை கைப்பற்றியபோது*

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:55:09 +0530

*உடனிருந்து கையொப்பம் செய்ததாக அவர்கள் விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துள்ளார்கள். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்*" என்று சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7.** அரசு தரப்பு சாட்சியங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக கூறப்பட்ட சாட்சியங்கள் பற்றி குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி கடந்த 12.03.2026ம் தேதி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர்கள் அரசு தரப்பு சாட்சியங்கள் பொய் சாட்சிகள் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**8. பிரச்சனை:**

இந்த வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய சங்கதி யாதெனில் 1 மற்றும் 2 எதிரிகளின் மீது பிரிவுகள் 397 உ/இ 392 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.03.25 17:55:14 +0530

**9. பிரச்சனைக்கு தீர்வு:–**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டிருந்தாலும், புகார் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படவில்லை. முறையாக புலன்விசாரணை செய்யப்பட்டுள்ளது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றச்சம்பவத்தில் ஈடுப்பட்டுள்ளார்கள் என்பதை புலன்விசாரணை அலுவலர் தனது சாட்சியத்தில் தெளிவாகச் கூறியுள்ளார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

**10.** இதற்கு குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் அனைவருமே பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ள நிலையிலும், சம்பவ சாட்சிகளான அ.சா.1/திரு.திருப்பதி/நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் அ.சா.2/திரு.ராஜா, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சாட்சியான அ.சா.3/திரு.சீனிவாசன், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.4/திரு.சுந்தரலிங்கம் மற்றும் அ.சா.5/திரு.ஆனந்தகுமார் ஆகியோர் தங்களது சாட்சியங்களில்

இந்த வழக்கின் எதிரிகளின் குற்றச்செயல்கள் குறித்து எதுவும் கூறாத நிலையிலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டார்.

**11.** இவ்வழக்கின் சம்பவ சாட்சியான அ.சா.1/திரு.திருப்பதி/ நிகழ்நிலை புகார்தாரர், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது சிவகங்கையில் குடியிருந்து டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். **இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கின் சம்பவம் குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது.** என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார்மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது.** புகார் மனுவில் உள்ள **கையொப்பம்** மட்டும்/**அ.த.சாஆ.**1. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்".*

**11.1.** இவ்வழக்கின் சம்பவ சாட்சியான அ.சா.2/திரு.ராஜா, தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது கொட்டக்குடி தெருவில் குடியிருந்து பால் வியாபாரம் மற்றும் சென்டிரிங் வேலை செய்து வருகிறேன்.*

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:55:27 +0530

***எனக்கு அ.சா.1 திருப்பதி என்பவரை தெரியாது. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.*** *சாட்சி சீனிவாசன் என்பவரை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை".*

**11.2.** இவ்வழக்கின் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சாட்சியான அ.சா.3/திரு.சீனிவாசன், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது டி.புதுார் திருவாசக தெருவில் குடியிருந்து பெயின்டிங் கான்டராக்ட் செய்து வருகிறேன்.* ***எனக்கு அ.சா.1 திருப்பதி என்பவரை தெரியாது. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.2 ராஜா என்பவரை எனக்கு தெரியாது.*** *பார்வை மகஜரில் உள்ள சீனிவாசன் என்ற முதல் கையொப்பம் என்னுடையது* ***அல்ல.*** *வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை".*

**11.3.** இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.4/திரு.சுந்தரலிங்கம், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது சோழபுரத்தில் வசித்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். சாட்சி ஆனந்தகுமார் என்பவரை தெரியம். **வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.** தற்போது என்னிடம் காட்டப்படும் 2வது எதிரி லெட்சுமணன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பத்தை எப்போது எங்கு வைத்து போலிசாரிடம் கையொப்பம் செய்தேன் என்று தெரியாது**. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் மட்டும்/**அ.த.சா.ஆ.2**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை".*

**11.4.** இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5/திரு.ஆனந்தகுமார், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது சோழபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி சுந்தரலிங்கம் என்பவரை தெரியம். **வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.** தற்போது என்னிடம் காட்டப்படும் 2வது எதிரி லெட்சுமணன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது **கையொப்பம் என்னுடையது இல்லை. வழக்கு சம்பந்தமாக***

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.03.25 17:55:38 +0530

***போலிசார் என்னை விசாரிக்கவில்லை".***

**12.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1/திருப்பதி, எதிரிகள் இருவரும் தான் தன்னை தாக்கி தனக்கு காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், தன்னிடமிருந்து ரூ.5000/– பணத்தை கொள்ளையடித்தார்கள் என்பது பற்றியும் தனது சாட்சியத்தில் எந்தவொரு பொருண்மையையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும், இவ்வழக்கின் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சாட்சியான அ.சா.3/திரு.சீனிவாசன், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.4/திரு.சுந்தரலிங்கம் மற்றும் அ.சா.5/திரு.ஆனந்தகுமார் ஆகியோரும் தங்களது சாட்சியத்தில் எதிரியின் குற்றச்செயல்கள் குறித்து எதுவும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், மேற்படி சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் இவ்வழக்கு தொடர்பாக தங்களுக்கு எந்தவொரு சங்கதியும் தெரியாது என்றும், எதிரிகளை தங்களுக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளபோதும் அவர்கள் அரசு வழக்கிற்கு ஆதரவாக எந்தவொரு சங்கதியையும் தங்களது சாட்சியத்தில் குறிப்பிடவில்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:55:43 +0530

**13.** அரசு தரப்பில் இவ்வழக்கினை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் அ.சா.6/திரு.ஜான்பிரிட்டோ, இவ்வழக்கில் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அறித்துள்ளார். மேற்படி அ.சா.6ன் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் தான் குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்று தீர்மானிக்க இயலாது. எனவே, 1 மற்றும் 2 எதிரிகள் மீது பிரிவுகள் 397 உ/இ 392 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயத்திற்கு அப்பால் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14. இறுதியாக,**

1 மற்றும் 2 எதிரிகள், பிரிவுகள் 397 உ/இ 392 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 235(1) குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம், 1973–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் பிணைமுறி ஆவணம் மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டுக் காலத்திற்குப்பின் ரத்தாகவும் பிரிவு 452 கு.வி.மு.ச–வின் கீழ் உத்தரவிடப்படுகிறது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:55:48 +0530

இவ்வழக்குச் சொத்துக்களான **பி.ஆர்.எண்.113/2025**–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள**அ.த.பொ.சா.2**/வாள்–1, **அ.த.பொ.சா.3/** பொம்மை கைத்துப்பாக்கி – 1, **அ.த.பொ.சா.5/**வாள்– ஒன்று வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின் விதி 262 குற்றவியல் நடைமுறை விதிகள், 2019ன் கீழ் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்குச் சொத்துக்களான **அ.த.பொ.சா.1/**ரூ.5000/– (1000/– ரூபாய் நோட்டுக்கள்–5)–ன் புகைப்படம், **அ.த.பொ.சா.4/** TN 59 AK 5834 என்ற Ford காரின் புகைப்படம் வழக்கு கோப்புடன் வைக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்குச் சொத்தான Item No.1 ரூ.5000/–ஐ Crl.M.P.No.965/2017ன் படி மனுதாரர் திருப்பதி என்பவர் 15.02.2017ம் தேதி இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ளார். மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின் அந்த தொகையை மனுதாரர் திருப்பதி வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்குச் சொத்தான TN–59–AK–5834 என்ற பதிவெண் கொண்ட Ford கார்–ஒன்றினை காவல் நிலைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின் வண்டியை உரிமையாளர் வசம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:55:53 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 25–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:55:58 +0530

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**சிவகங்கை.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு. திருப்பதி | சம்பவம் பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறுகிறார். |
| அ.சா.2 | திரு. ராஜா | சம்பவ சாட்சி. |
| அ.சா.3 | திரு. சீனிவாசன் | பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சாட்சி. |
| அ.சா.4 | திரு.சுந்தரலிங்கம் | ஒப்புதல் வாக்குமூலச் சாட்சி. |
| அ.சா.5 | திரு. ஆனந்தகுமார் | ஒப்புதல் வாக்குமூலச் சாட்சி. |
| அ.சா.6 | திரு.ஜான்பிரிட்டோ | சார்பு ஆய்வாளர்/முதல் தகவல் அறிக்கை பதிவு மற்றும் புலன் விசாரணை குறித்து கூறுகிறார். |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | புகார் மனு | அ.சா.6 |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | அத்தாட்சி | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | அத்தாட்சி | அ.சா.6 |
| அ.சா.ஆ.9 | படிவம் 91 | அ.சா.6 |

**அரசு தரப்பு பொருள் சான்று:**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.சா.1 | ரூ.5000/- (1000/- ரூபாய் நோட்டுக்கள்-5)-ன் புகைப்படம், | அ.சா.6 |
| அ.சா.பொ.சா.2 | வாள்-1 | அ.சா.6 |
| அ.சா.பொ.சா.3 | பொம்மை கைத்துப்பாக்கி - 1 | அ.சா.6 |
| அ.சா.பொ.சா.4 | TN 59 AK 5834 என்ற Ford காரின் புகைப்படம் | அ.சா.6 |
| அ.சா.பொ.சா.5 | வாள்-1 | அ.சா.6 |

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:56:06 +0530

**<u>எதிரியின் தரப்பு சாட்சி:</u>** இல்லை.

**<u>எதிரியின் தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை.

**<u>எதிரியின் தரப்பு பொருள் சான்று:</u>** இல்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.25 17:56:12 +0530

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**சிவகங்கை.**